உபநயனம் என்னும் சடங்கு ஆன பின்னரே வேதம் பயில வேண்டுமென்று முக்கியமான விதி உள்ளதாலும், உபநயனம் செய்யாதவன் வேதம் படிக்கக் கூடாது என்றும் விதிகள் சொல்லுகின்றன" எனக் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு உபநயனம் என்னும் சடங்கு இந்து மத ஆகமத்தில் நடைபெறுவதில்லை. வேதம் படிப்பதற்கான முக்கியமான சாஸ்திர ரீதியான தகுதி மாணவிகளுக்கு இல்லாத நிலையில் பெண்களை வேத பாடசாலையில் சேர்ப்பது சாத்தியமில்லை என்று மேற்கூறிய வல்லுநர்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

83—

திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்துதல்

***33655**—*திருமதி டி. சக்குபாய் தேவராஜ்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருவள்ளூர் நகரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் புதியதாக இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் நகரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் ஏற்கனவே இரத்த வங்கி ஏற்படுத்தப்பட்டு உள்ளதால் புதியதாக இரத்த வங்கி ஏற்படுத்தும் கேள்விக்கு இடமில்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*
(பத்தாம் பட்டியல்)

1—

நீர்பிடிப்புப் பகுதிகளில் பட்டா வழங்குதல்

வினா எண் **38386**—*டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கண்மாய்களில் நீர்பிடிப்புப் பகுதிகளில் பட்டா வழங்குவதைத் தவிர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

---

* குறிப்பு: இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.